அரசு ஆடவர் மேல்நிலைப் பள்ளி –செய்யாறு

## தமிழ்த் திறனறித் தேர்வு

**பத்தாம் வகுப்பு – பொதுத்தமிழ் - இயல் – 1**

1. 'ஓங்கு' எனும் அடைமொழி பெற்று விளங்கும் எட்டுத்தொகை நூல்.

   (c) குறுந்தொகை (b) பதிற்றுப்பத்து (c) கலித்தொகை (d) பரிபாடல்

2. அன்னை மொழியே! அழகார்ந்த <u>செந்தமிழே!</u> - அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு அறிக.

   (a) வினைத்தொகை (b) உரிச்சொல் (c) பண்புத்தொகை (d) வினையெச்சம்

3. 'நாடும் மொழியும் நமதிரு கண்கள்' என்றவர்.

   (a) பாரதிதாசன் (b) பாரதியார் (c) கவிமணி (d) நாமக்கல் கவிஞர்

4. ஆய்க,

   கூற்று :- ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்கான சிறந்த வழி மொழியாகும்.

   காரணம்:- திருந்திய மக்களை மற்ற உயிரினின்று பிரித்துக் காட்டுவது மொழி.

   (a) கூற்று; காரணம் இரண்டும் சரி; கூற்றுக்குக் காரணம் சரியான விளக்கம்.

   (b) கூற்று; காரணம் இரண்டும் சரி; கூற்றுக்குக் காரணம் சரியான விளக்க மன்று.

   (c) கூற்று சரி; காரணம் தவறு.

   (d) கூற்று தவறு; காரணம் சரி.

5. தவறான இணையைத் தேர்க.

   (a) பூவின் தோற்றநிலை - வீ

   (b) பூ விரியத் தொடங்கும் நிலை - போது

   (c) பூவின் மலர்ந்த நிலை - மலர்

   (d) பூ வாடின நிலை - செம்மல்

6. 'உலகப் பெருந்தமிழர்' என்ற சிறப்பிற்குரியவர்.

   (a) பாவாணர் (b) இரா.இளங்குமரனார்

   (c) பெருஞ்சித்திரனார் (d) க.சச்சிதானந்தன்.

7. '<u>மெத்த வணிகலமும்</u> மேவலால்' - ஐம்பெருங்காப்பியங்கள் எனும் பொருள் விளங்கும் வகையில் அடிக்கோடிட்ட சொல்லைப் பிரித்து எழுதுக.

   (a) மெத்த + அணி + கலன் (b) மெத்த + வணிகலன்

   (c) மெத்த + அணிகலன் (d) மெத்த + வணி + கலன்

8. 'சந்தக்கவிமணி' எனக் குறிப்பிடப்படும் தமிழழகனாரின் இயற்பெயர்.

   (a) மொழிஞாயிறு (b) க.அப்பாதுரையார் (c) க.சச்சிதானந்தன் (d) சண்முகசுந்தரம்



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

9. ‘காலையிலேயே மாலையும் வந்துவிட்டதே!’ - என்னும் சிலேடைத் தொடரைக் கூறியவர்.

(a) கி.ஆ.பெ (b) சுப்புடு (c) இரா.பி.சேது (d) கி.வா.ஜ

10. எடுத்துக்காட்டு உவமை அணியை உரைநடையில் பயன்படுத்துகையில் அதற்கு வழங்கும் பெயர்,

(a) இலக்கணை (b) எதிரிணை இசைவு

(c) இணை ஒப்பு (d) முரண்படு மெய்மை

11. கீழ்க்காண்பவற்றுள் தவறான தொடரைத் தேர்க.

(a) உயிரளபெடை மொழி முதல், இடை, கடை ஆகிய மூவிடத்தும் அளபெடுக்கும்.

(b) அளபடை என்பது முதலெழுத்துகளுள் இடம் பெற்றுள்ளது.

(c) ஒற்றளபெடையில் அளபெடுக்கும் மெய்கள் பதினொன்று,

(d) ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது சொல்லிசை அளபெடையாகும்.

12. “எள் து” என்னும் தொடர்மொழிக்குரிய பொருளைத் தேர்க.

(a) எள்ளை உண் (b) எட்டுத் திசை (c) எள்ளை துளை (d) எண் பெயர்

13. தொழிற்பெயர் அல்லாத ஒன்றைத் தேர்க.

(a) காண்பவர் (b) காணாமை (c) காட்சி (d) காணல்

14. ‘உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண் வற்றாகும் கீழ்" - இக்குறட்பாவிற்குப் பொருத்தமான தொடையைக் காண்க.

(a) பொழிப்பு அளபடை (b) இணை அளபெடை

(c) ஒரூஉ அளபைடை (d) கீழ்க்கதுவாய் அளபடை

15. பொருத்தமற்ற இணையைத் தேர்க.

| | <u>சொல்</u> | | <u>கூட்டப்பெயர்</u> |
|---|---|---|---|
| (a) | கல் | - | குவியல் |
| (b) | பழம் | - | குலை |
| (c) | புல் | - | வெளி |
| (d) | ஆடு | - | மந்தை |

16. பிரித்து எழுதுக. - ஆரத்தி

(a) ஆர் + அத்தி (b) ஆல் + அத்தி (c) ஆ + அத்தி (d) ஆன் + அத்தி

17. ‘மா’ எனும் ஓரெழுத்து ஒருமொழிக்குரிய பொருளைத் தேர்க.

(a) விலங்கு (b) மரம் (c) அரசன் (d) மலர்



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

18. "எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் தமிழ் அன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் அமைத்து, பரணிப் பாடி, கலம்பகம் கண்டு, உலா வந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி, அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்" - இப்பத்தியில் இடம்பெற்றுள்ள தவறான தொடரைத் தெர்க.

(a) பிள்ளைத் தமிழ் பேசி (b) செந்நாப் புலவர்கள்
(c) அணியாகப் பூட்டி (d) பரணிப் பாடி

19. தவறான இணையைத் தேர்க.

(a) Vowel - உயிரெழுத்து
(b) Consonant - மெய்யெழுத்து
(c) Homograph - ஒப்பெழுத்து
(d) Monolingual - பொதுமொழி

20. "உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து
ஒன்றன மாட்டின் அஃது உருவகமாகும்" - என்று எழுதியவர்.

(a) பவணந்தி (b) தொல்காப்பியர் (c) தண்டி (d) புத்தமித்திரர்

21. வேறுபட்ட ஒன்றைத் தேர்க.

(a) கெட்டவன் (b) கெடு (c) கேடு (d) கெடுதல்

22. வினையாலணையும் பெயருக்குப் பொருத்தமற்றதைத் தேர்க.

(a) தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிக்கும்
(b) வினை, பெயர்த்தன்மையாகி வினையையே உணர்த்தி நிற்கும்.
(c) காலம் காட்டும்
(d) மூவிடத்திற்கும் உரியது.

23. "ஒருமொழி ஒருபொரு ளனவாம் தொடர்மொழி"
பலபொரு ளனபொது __________ ஏற்பன" - விடுபட்ட சொல்லைத் தேர்க.

(a) ஒருமையும் (b) பன்மையும் (c) இருமையும் (d) சிறப்பையும்

24. கீழ்க்காண்பவற்றுள் எது ஐம்பெருங்காப்பியங்களுள் இடம் பெறாதது?

(a) சிலப்பதிகாரம் (b) குண்டலகேசி (c) வளையாபதி (d) சூளாமணி

25. எட்டுத்தொகை நூல்களுள் அடைமொழியால் குறிக்கப் பெறாத நூல்.

(a) குறுந்தொகை (b) பதிற்றுப்பத்து (c) கலித்தொகை (d) ஐங்குறுநூறு

26. தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களின் வாயிலாகத் தமிழுணர்வை உலகெங்கும் பரப்பியவர்.

(a) துரை.மாணிக்கம் (b) க.சச்சிதானந்தன் (c) பாவாணர் (d) எழில் முதல்வன்.



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

27. “திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்” - என்னும் நூலை எழுதியவர்,

(a) வீரமாமுனிவர் (b) யெஸ்பர்சன் (c) கால்டுவெல் (d) டி.எஸ்.எலியட்

28. 'பதினெண்கீழ்கணக்கு' - ‘கணக்கு’ எனும் சொல்லுக்குரிய பொருள்.

(a) எண் (b) நூல் (c) நீதி (d) பாட்டு

29. அடி மரத்தினின்று பிரியும் மாபெரும் கிளைக்கு வழங்கும் மரபுச்சொல்.

(a) கவை (b) கொப்பு (c) சினை (d) போத்து

30. ஒருமொழியின் இலக்கியம் எம்மக்களால் அமையப்பெறும்?

(a) பொதுமக்கள் (b) புலமக்கள் (c) குடிமக்கள் (d) இனமக்கள்

31. கீழ்க்காண்பவற்றுள் எதனுடன் தமிழ் இணைத்துப் பேசப்படவில்லை?

(a) விண் (b) முகில் (c) வானவில் (d) விண்மீன்

32. ‘இரட்டுற மொழிதல்’ - இதற்குப் பொருத்தமற்ற தொடரைத் தேர்க.

(a) ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள்பட வரும்.

(b) இரட்டுற மொழிதலின் வேறுபெயர் சிலேடை எனப்படும்

(c) செய்யுளிலும் உரைநடையிலும் சிலேடைகள் பயன்படுத்தப்படுகின்றன.

(d) மேடைப் பேச்சில் சிலேடைக் பயன்படுத்தப்படுவதில்லை.

33. வேறுபட்ட இலக்கிய வடிவத்தைத் தேர்வு செய்க.

(a) சிறுகதை (b) கட்டுரை (c) புதினம் (d) புதுக்கவிதை

34. 'சொல்' குறித்த பின்வரும் கூற்றுகளுள் தவறானதைத் தேர்க.

(a) ஓர் எழுத்து தனித்தோ, பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தரும் வகையில் அமைவது சொல் எனப்படும்.

(b) இரு திணைகளையும் ஐந்து பால்களையும் குறிக்கும்.

(c) உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வரும்.

(d) மூவகை இடங்களில் வருவதோடு முக்காலத்தையும் குறிக்கும்.

35. கீழ்க்காண்பவற்றுள் எது எட்டுத்தொகையுள் இடம்பெறா?

(a) பரிபாடல் (b) கலித்தொகை (c) குறிஞ்சிப்பாட்டு (d) நற்றிணை

36. பின்வருவனவற்றுள் வேறுபட்ட ஒன்றைத் தேர்க.

(a) நடை (b) நட (c) நடத்தை (d) நடத்தல்

37. “<u>தென்னவன்</u> சிறுமலை திகழ்ந்து தோன்றும்” - அடிக்கோடிட்ட சொல் யாரைக் குறிக்கிறது?

(a) வேளிர் (b) பாண்டியன் (c) சோழன் (d) சேரன்

38. “உறாஅர்க் குறுநோய்' - இத்தொடரில் அளபெடை இடம்பெற்றுள்ள இடம்.

(a) மொழியிடை (b) மொழிஇறுதி (c) மொழிமுதல் (d) இவற்றுள் எதுவுமில்லை.



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

39. "முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்" - அடிக்கோடிட்ட சொல்லை ஆழியோடு பொருத்தி, அச்சொல்லுக்குரிய பொருளைத் தேர்க.

(a) மூன்று சங்கம் (b) மூன்று சங்கு (c) மூன்று தமிழ் (d) இவை அனைத்தும்

40. சம்பா நெல்லின் உள்வகைகள் எத்தனை?

(a) 60 (b) 54 (c) 9 (d) 27

41. தமிழழகனார் இயற்றிய சிற்றிலயக்கிய நூல்களின் எண்ணிக்கை.

(a) 96 (b) 421 (c) 12 (d) 72

42. சங்க இலக்கியம் என்பது நம் 'பாட்டனார் தோப்பு' எனில்; இக்கால இலக்கியம் ________

(a) கொள்ளுப் பேரன் சோலை (b) தந்தையார் தோட்டம்

(c) மாமனார் வயல் (d) பூங்கா

43. கீழ்க்காண்பவர்களுள் இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கொண்டவர்.

(a) பாவாணர் (b) சந்தக் கவிமணி (c) எழில்முதல்வன் (d) தமிழ்த் தென்றல்

44. "புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்" - இக்குறளில் எடுத்துக்காட்டு உவமையணி பயின்றுவரக் காரணம்.

(a) உவமை வெளிப்படையாக வந்துள்ளது

(b) உவமேயம் மறைந்து வந்துள்ளது

(c) உவம உருபு மறைந்து வந்துள்ளது

(d) உவமையையும் உவமேயத்தையும் ஒன்றெனக் கூறப்பட்டுள்ளது

45. "நடத்தல்" - இப்பெயரில் கீழ்க்காணும் எது இடம்பெற்றுள்ளது?

(a) எண் (b) இடம் (c) காலம் (d) இவற்றுள் எதுவுமில்லை.

46. தமிழ்நாட்டிலன்றி வேறெங்கும் விளையாத நெல் வகைகள்.

(a) வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி (b) சம்பா, மட்டை, கார்

(c) செந்நெல், வெண்ணெல், கார்நெல் (d) சம்பா, வரகு, கார்

47. "தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ - சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்கினால், கீழ்க்காணும் எச்சொல் பொருந்தா?

(a) வான் மழை (b) மணிமேகலை (c) விண்வெளி (d) பொன்விலங்கு

48. "எறும்புந்தன் கையால் எண்சாண்" - அடிக்கோடிட்ட சொல்லுக்குரிய தமிழ் எண்ணைக் காண்க.

(a) க (b) ச (c) எ (d) அ



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

49. "தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே

தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே"

- கவணி,

கூற்று :- மேற்காணும் பாடலடியில் சீர்த்தொடை இடம் பெற்றுள்ளது.

காரணம் :- சீர்த்தொடை என்பது அடிதோறும் இடம்பெறும்.

இவற்றுள்,

(a) கூற்று சரி; காரணம் தவறு ; கூற்றுக்குக் காரணம் சரியான விளக்கமன்று

(b) கூற்று சரி; காரணம் சரி; கூற்றுக்குக் காரணம் சரியான விளக்கம்

(c) கூற்று சரி; காரணம் தவறு.

(d) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

50. வினையாலணையும் பெயர் இடம்பெறாத தொடரைத் தேர்க.

(a) கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருந்தார். அவரை அழைத்து வாருங்கள்.

(b) ஊட்டமிகு உணவு உண்பவர் நீண்ட வாழ்நாள் பெறுவார்.

(c) நேற்று என்னைச் சந்தித்தவர் என் நண்பர்.

(d) பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தவர் போட்டித் தேர்வில் வென்றார்.

51. கீழ்க்காணும் எச்சொல் 'உலகம்' எனும் பொருளைத் தரா?

(a) பார் (b) களம் (c) ஞாலம் (d) வையகம்

52. பொருத்தமற்ற சொல்லைத் தேர்க.

(a) மஞ்ஞை (b) மயில் (c) கிள்ளை (d) தோகை

53 "ஆனை ஆயிரம் அமரிடை வென்ற

மானவனுக்கு வகுப்பது பரணி" - இங்குக் குறிப்பிடும் 'பரணி' என்பது

(a) நாள் மீன் (b) மன்னன் பெயர்

(c) கலிங்கத்துப்பரணி (d) சிற்றிலக்கிய வகை

54. "எங்கே செல்கிறாய்*? - என்பது.

(a) இருமொழி (b) தனிமொழி (c) தொடர்மொழி (d) பொதுமொழி

55. சார்பெழுத்துகள் பத்தனுள் குறுகி ஒலிப்பவை எத்தனை?

(a) 4 (b) 6 (c) 2 (d) 8

56. பின்வருவனவற்றுள் எது எழில்முதல்வனின் நூலன்று?

(a) தமிழிசை இயக்கம் (b) இனிக்கும் நினைவுகள்

(c) எங்கெங்கு காணினும் (d) யாதுமாகி நின்றாய்



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

57. கீழ்க்காணும் மெய்களுள் எவை அளபெடுக்கா?

(a) க், ச் (b) வ், ல் (c) ங், ஃ (d) ம், ன்

58. மொழியைத் தெளிவுறப் பேசவும் எழுதவும் உதவுவது.

(a) இலக்கியம் (b) மொழி (c) சொற்பொருள் (d) இலக்கணம்

59 'சால்பு ஊன்றிய தூண்' எத்தனையென வள்ளுவர் குறிப்பிடுகிறார்?

(a) மூன்று (b) நான்கு (c) ஐந்து (d) இரண்டு

60. 'மரமது மரத்தில் ஏறி" இவ்வடிக்குரிய பொருளைத் தேர்க.

(a) ஒரு மரத்தில் மற்றொரு மரம் முளைத்தல்

(b) அரசர் குதிரை மீது ஏறுதல்

(c) அரசன் வேங்கை மீது அம்பு எய்தல்

(d) அரச மரத்தில் ஆலமரம் இருத்தல்

61. "வாழையும் கமுகும் தாழ்குலைத் தெங்கும்" - 'கமுகு' என்பது

(a) பாக்கு (b) பலா (c) மூசு (d) தென்னை

62. "ஊர் கூடிச் செக்குத் தள்ள முடியுமா? என்று . கேட்கிறார்கள். ஊர் கூடின பிறகுதான் செக்குத் தள்ள வேண்டும் என்று காத்திருப்பவர்களின் காரியம் கை கூடாது. புரோகிதருக்காக அமாவாசை காத்திருப்பதில்லை" - என்று எழுத்தாளர் வ.ராமசாமி உரைநடையில் குறிப்புடுவது, எந்த அணிக்கு இணையானது?

(a) உவமை அணி (b) எடுத்துக்காட்டு உவமை அணி

(c) உருவக அணி (d) தற்குறிப்பேற்ற அணி

63. "சொல்லின் செல்வர்" என்ற சிறப்பிற்குரியவர்.

(a) வ.ராமசாமி (b) அறிஞர் அண்ணா (c) இரா.பி. சேது (d) அனுமன்

64. உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர்.

(a) பாவலரேறு (b) தமிழழகனார் (c) எழில்முதல்வதன் (d) பாவாணர்

65. இக்கால இலக்கியங்களில் உணர்வுகளைத் தூண்டி எழுப்புவதில் உவமையைவிட வெற்றிபெறுவது எது?

(a) படிமம் (b) குறியீடு (c) தொன்மம் (d) உருவகம்

66. கீழ்க்காண்பவற்று எது தாவரங்களின் குலை வகைகளுள் இடம் பெறா?

(a) கொத்து (b) தாறு (c) சொண்டு (d) அலகு

67. பின்வருபவர்களுள் யார் தமிழ்வழித் திருமணங்களை நடத்தியவர்?

(a) இரா. இளங்குமரனார் (b) பாவாணர்

(c) பாவலரேறு (d) தமிழழகனார்,



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

68. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு,

(a) சிங்கப்பூர் (b) மலேசியா (c) கனடா (d) இந்தியா

69. "சாகும்போதும் தமிழ் படித்துச் சாகவேண்டும் - என்றன்

சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்." - என்று பாடியவர்.

(a) க.சச்சிதானந்தன் (b) காசிஆனந்தன் (c) வாணிதாசன் (d) முடியரசன்

70. பிரித்து எழுதுக - 'பேரரசே'

(a) பேர்+அரசே (b) பெருமை + அரசே (c) பெரும் +அரசே (d) பே+அரசே

71. தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே! - தென்னன் "மகள்" யார்?

(a) கண்ணகி (b) வைகை (c) தமிழ் (d) வேண்மா

72. "உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச்

செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த" - இவ்வடிகள் கனிச்சாறு எனும் தொகுப்பில் எத்தலைப்பின் கீழ் இடம் பெற்றுள்ளன?

(a) தமிழ்த்தாய் வாழ்த்து (b) தமிழ் உணர்வு

(c) நூறாசிரியம் (d) முந்துற்றோம்

73. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ள பத்தாம் வகுப்புப் பொதுத்தமிழ் நூலின் முதல் இயலின் பொருண்மை யாது?

(a) அமுத ஊற்று (b) என்னுயிர் (c) என் உயிர் தமிழ் (d) கனிச்சாறு

74. எட்டுத் தொகை நூல்களுள் அக நூல்களின் எண்ணிக்கை

(a) மூன்று (b) ஐந்து (c) நான்கு (d) இரண்டு,

75. தமிழீத் தென்றல்' என்ற சிறப்பிற்குரியவர்.

(a) இரா.பி.சே (b) கி.வா.ஜ (c) கி.ஆ.பெ. (d) திரு.வி.க.

76. 'ஞாயிறு, திங்கள், நெஞ்சம் போன்ற அஃறிணைப் பொருள்கள், சொல்லுந போலவும், கேட்டுந போலவும். சொல்லியாங்கு அமையும்" இச்செய்தி தொல்காப்பியத்தில் எவ்வியலில் இடம் பெற்றுள்ளது?

(a) உவம இயல் (b) பொருளியல் (c) செய்யுளியல் (d) மரபியல்

77. "சொல்லாராய்ச்சியில், பாவாணரும் வியந்த பெருமகனார்" என்ற சிறப்பைப் பெற்றவர்

(a) இரா. இளங்குமரனார் (b) தேவநேயர்

(c) க.அப்பாதுரையார் (d) பெருஞ்சித்திரனார்

78. வேறுபட்ட ஒன்றைத் தேர்க.

(a) போது (b) முறி (c) வீ (d) செம்மல்



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

79. “சொல்லுதல்" - இச்சொல்லுக்குப் பொருந்தாதப் பொருளைத் தேர்க.

(a) மொழிதல் (b) இயம்பல் (c) விரித்தல் (d) விளம்புதல்

80. பா வகையால் பெயர் பெற்ற எட்டுத்தொகை நூல்.

(a) குறுந்தொகை (b) பதிற்றுப்பத்து (c) அகநானூறு (d) பரிபாடல்.

81. கீழ்க்காண்பவற்றுள் எது தொழிற்பெயரன்று ?

(a) அறிதல் (b) புரியாமை (c) தெரிந்தது (d) பிறத்தல்

82. ‘நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' - இத்தொடரில் 'நால்' என்பது

(a) திருக்குறள் (b) ஏலாதி (c) நான்மறை (d) நாலடியார்

83. பின்வருவனவற்றுள் எது பகுபதமன்று?

(a) வேங்கை (b) மலர் (c) எட்டு (d) கண்ணன்

84. கூற்று :- உறாஅ, படாஅ என்பன இசைநிறை அளபடைகள்

காரணம் :- சீரும் தளையும் சிதையாமல் இருக்க வேண்டி அளபெடுத்தது.

(a) கூற்று சரி; காரணம் சரி; மேலும், கூற்றுக்குக் காரணம் சரியான விளக்கம்.

(b) கூற்று சரி; காரணம் சரி: மேலும், கூற்றுக்குக் கரணம் சரியான விளக்கமன்று.

(c) கூற்று சரி; காரணம் தவறு

(d) கூற்று தவறு ; காரணம் சரி.

85. சார்பெழுத்துகள் பத்தனுள், மாத்திரை அளவால் நீண்டும் குறுகியும் ஒலிக்காமல் இயல்பாக ஒலிக்கும் எழுத்துகள்.

(a) இரண்டு (b) மூன்று (c) நான்கு (d) ஐந்து

86. ஐ, ஔ என்னும் உயிர் நெட்டெழுத்துகளுக்கு இனமான குற்றெழுத்துகள்.

(a) உ. எ (b) இ, உ (c) ஆ, ஈ. (d) இ, எ

87. "நாட்டுப் பற்று" எனும் கட்டுரைத் தொகுப்பு யாருடையது?

(a) அறிஞர் அண்ணா (b) இரா.பி. சேது (c) மு.வரதராசனார் (d) வ.ராமசாமி

88. “தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்” - ‘சிறுமலை’ எம்மாவட்டத்தில் உள்ளது?

(a) மதுரை (b) நெல்லை (c) கோவை (d) திண்டுக்கல்

89. பின்வருவனற்றுள் சாகித்திய அகாதெமி விருதுபெற்ற நூலைத் தேர்க..

(a) இனிக்கும் நினைவுகள் (b) எங்கெங்கு காணினும்

(c) யாதுமாகி நின்றாய் (d) புதிய உரைநடை

90. ‘தமிழ்ச்சொல் வளம்’ என்னும் கட்டுரை இடம்பெற்றுள்ள நூல்.

(a) சொல்லாய்வுக் கட்டுரைகள் (b) சொற் பிறப்பியல்

(c) தமிழ்ச்சொல் மரபு (d) சொல்லும் பொருளும்



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

91. வேறுபட்ட ஒன்றைத் தேர்க.

(a) வெண்சங்கு (b) சலஞ்சலம் (c) அஞ்சுகம் (d) பாஞ்சசன்யம்

92. வேறுபட்ட ஒன்றைத் தேர்க

(a) செறு (b) அவல் (c) பழனம் (d) புறவு

93. பொருந்தா இணையைத் தேர்க.

| தாவரம் | | பிஞ்சு வகை. |
|---|---|---|
| (a) எள் | - | கவ்வை |
| (b) இளம்பாக்கு | - | குரும்பை |
| (c) வாழை | - | கச்சல் |
| (d) பலா | - | மூசு |

94. "இந்த உலகத்தில் பயம் என்ற ஒன்றிற்குத் தவிர வேறு எதற்கு நாம் பயப்பட வேண்டும்?" - என்பது.

(a) முரண்படு மெய்ம்மை (b) எதிரிணை இசைவு
(c) இலக்கணை (d) இணை ஒப்பு

95. "கற்றறிந்தார் ஏத்தும்" எனும் அடைமொழி பெற்று விளங்கும் நூல்.

(a) கலித்தொகை (b) குறுந்தொகை (c) பதிற்றுப்பத்து (d) அகநானூறு,

96. "இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே! - 'பாப்பத்து' என்பது.

(a) பதிற்றுப்பத்து (b) பரிபாடல் (c) பத்துப்பாட்டு (d) எட்டுத்தொகை

97. இலக்கணக் குறிப்புத் தருக - எண்தொகை

(a) வினைத்தொகை (b) எண்ணுப்பெயர் (c) வேற்றுமைத்தொகை (d) பண்புத்தொகை

98. "மழையும் புயலும்" - நூலினாசிரியர்.

(a) இரா.பி.சேது (b) வ.ராமசாமி (c) திரு.வி.க. (d) நா.பார்த்தசாரதி

99. "பன்மொழிப் புலவர்" என்ற சிறப்பிற்குரியவர்.

(a) திரு.வி.க. (b) பாவாணர் (c) க.அப்பாதுரையார் (d) எழில்முதல்வன்

100. சார்பெழுத்துகளுள் 'குறுக்கம்' எனும் பெயரைக் கொண்டு முடியும் எழுத்துகள்.

(a) மூன்று (b) ஐந்து (c) இரண்டு (d) நான்கு



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593